வாக்குமூலம்
உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.
வழக்கு எண். CC 206/2021
வழக்கு சாட்சி LW1 /PW1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வெங்கடேசன் | ஜாதி | |
| கணவர்/தந்தை | கேசவலு | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 54 |

தேதி 06.03.2025

எதிரி ஆஜர் இல்லை. **மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது.**

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் செங்குன்றம் பகுதியில் வசித்து வருகிறேன். நான் தற்போது அண்ணாநகர் பணிமனையில் எம்டிசி பேருந்து ஓட்டுனராக பணிபுரிந்து வருகிறேன். 30.03.2021 அன்று மாலை 6 மணியளவில் நான் 121 கோயம்பேடு to மீஞ்சூர் வழிதடத்தில் ஓட்டுனராக பணியில் இருந்தபோது, மஞ்சம்பாக்கத்தில் ஒரு நபர் முன்பக்க படிகட்டில் ஏறினார். அடுத்த பேருந்து நிறுத்தத்தில் ஸ்டேஜ் வருவதால் பின்பக்கம் சென்று நடத்துனரிடம் டிக்கெட் வாங்குமாறு கூறினேன். ஆனால் அவர் டிக்கெட் வாங்கவில்லை. அதனால் ஸ்டேஜ் நெருங்கியதால் பேருந்தை நிறுத்திவிட்டு பின்னால் இருந்து முன்பக்கம் வந்தார். நடத்துனர் அவரிடம் எங்கே டிக்கெட் வேண்டும் என்று கேட்டபோது, சுடுகாட்டிற்கு செல்லவேண்டும் என்று கூறினார். பின்னர் ஒயின் ஷாப்பிற்கு செல்ல வேண்டும் என்று மாற்றி கூறினார். அவரை மேலும் கேட்டபோது அவர் தனது அடையாள அட்டை, ஆதார் கார்டு, டிரைவிங் லைசன்ஸ் இவற்றில் எதையாவது கொண்டு ஸ்வைப் பண்ணிக்கொள்ளுமாறு கேட்டார். வாக்குவாதம் தொடர்ந்து கொண்டே இருந்தது. நேரம் ஆகியதால் இறங்குமாறு கூறினோம். ஆனால் அவர் இறங்காமல் எனது சட்டையை பிடித்து இழுத்து என்னை கீழே தள்ளிவிட்டார். அதில் எனக்கு கையில் வலது முழங்கையில் சிராய்ப்பு காயமும், மார்பிலும் அடிபட்டுவிட்டது. எனது

சட்டை கிழிந்துவிட்டது. நேரம் ஆகியதால் நாங்கள் அவரை இறக்கிவிட்டு ஓட்ட முயன்றபோது, அவர் கல்லை தூக்கி வந்து முன்பக்க கண்ணாடியை உடைப்பதற்கு முற்பட்டார். பின்னர் பயணிகள் உதவியோடு அவரை மாதவரம் பால்பண்ணை காவல் நிலையம் சென்று அவரை ஒப்படைத்தோம். பின்னர் இதுகுறித்து எம்.2 மாதவரம் பால்பண்ணை காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் புகாரானது நான் அளித்ததுதான். மேற்படி புகாரானது அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

குறுக்கு விசாரணை

எதிரியின் வழக்கறிஞர் ஆஜர் ஆகியும் குறுக்கு விசாரணை செய்யப்படாததால் குறுக்கு விசாரணையானது இல்லை என முடிக்கப்பட்டது.